# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

*பிரிவு* : TNPSC Group I *தேர்வு*

*பாடம்* : *இந்திய அரசியலமைப்பு*

*பகுதி* : **இந்திய நிர்வாகத்தின் கவனத்திற்குரிய ஆட்சிப் பகுதிகள்**

**காப்புரிமை**

*தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.*

*எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.*

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# இந்திய நிர்வாகத்தின் கவனத்திற்குரிய ஆட்சிப் பகுதிகள்

## இந்தியாவில் ஊழல் மற்றும் ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகள்

இந்தியாவில் ஊழல் (Corruption) காற்றைப் போல் அங்கு இப்படி எனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்துள்ளது! உலகம் முழுவதும் ஊழல் மனிதனின் உடன் பிறந்த குணமாக உள்ளது. சாணக்கிய கௌடில்யர் (Kautilya) போன்றவர்கள் ஊழலைப் பற்றி விரிவாக எழுதியுள்ளனர். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்திய தண்டனைச் சட்டத் தொகுப்பு (Indian Penal Code, 1860) பொதுப்பணி ஊழல் பற்றியது. இந்தியா விடுதலை பெற்றபின் ஊழல் தடுப்புச் சட்டம் (Prevention of Corruption Act, 1947) நடைமுறைப்படுத்தப்பட்டது. பொதுப்பணி ஊழலைப் பற்றி விரிவாக ஆய்வு செய்த சந்தானம் குழு (Santhanam Committee) 1964 மார்ச் 31-ல் தேதி சமர்ப்பித்த அறிக்கையில் ஊழலை ஒழிக்க 137 பரிந்துரைகளைச் செய்தது. அதன்பின் மத்திய அரசால் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பயனில்லை. ஊழல் ஒழிந்தபாடில்லை!

### மத்திய ஆணையம்

மத்தியப் புலனாய்வு ஆணையம் சந்தானம் குழுவின் பரிந்துரையின்படி மத்திய அரசால் அமைக்கப்பட்ட அமைப்பாகும். 1964ஆம் ஆண்டு மத்திய அரசின் ஆட்சித் துறைத் தீர்மானத்தின் மூலம் அமைக்கப்பட்டதே மத்தியப் புலனாய்வு ஆணையமாகும். 2003 செப்டம்பர் மாதம் நாடாளு மன்றம் இயற்றிய சட்டத்தின்படி இந்த ஆணையத்துக்கு சட்ட அந்தஸ்து அளிக்கப்பட்டது. அரசாங்க பொதுப்பணிகளில் ஊழலை ஒழிப்பதற்காகத் தற்கால இந்திய வரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட மகத்தான முயற்சிகளில் ஒன்று மத்தியப் புலனாய்வு ஆணையத்தைத் தோற்றுவித்ததாகும்.

### ஆணையத்தின் அமைப்பு

மத்தியப் புலனாய்வு ஆணையத்தின் தலைவரும் இரண்டுக்கு மேற்படாத உறுப்பினர்களும் உள்ளனர். இவர்கள் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றனர். பிரதமர் (தலைவர்), மத்திய உள்துறை அமைச்சர், மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரைக் கொண்ட மூவர் தெரிவுக் குழுவின் பரிந்துரையின் பேரில் குடியரசுத் தலைவரால் இவர்கள் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் 4 ஆண்டுகள் அல்லது 65 வயது நிறைவடையும் வரை பதவியில் இருக்கலாம். இடையில் அவர்கள் குடியரசுத் தலைவரால் விதிகளின்படி பதவி நீக்கம் செய்யப்படலாம். மத்தியப் புலனாய்வு ஆணையர்கள் பதவி ஓய்வு பெற்ற பின்னர் மத்திய மாநிலப் பணிகளில் எந்தப் பதவியையும் வகிக்கக் கூடாது. தற்போது இந்த ஆணையத்தில் மொத்தம் நூற்றுக்கும் மேற்பட்ட பணியாளர்கள் உள்ளனர்.

**ஊதியமும் சலுகைகளும்**

மத்திய புலனாய்வு ஆணையத்தின் ஊதியம், ஊதியப் படிகள், சலுகைகள், பிற பணி சம்பந்தமான விதிகள்ஆகியவை மத்திய பொதுப்பணி ஆணையர்கள்(UPSC) பெறும் ஊதியத்துக்குச் சமமானவை. இவை ஆணையர்களின் பதவிக்காலத்தில் மாற்றப்படாமல் இருக்கும். அதாவது மத்திய புலனாய்வு ஆணையர்களுக்குப் பணிப் பாதுகாப்பு முற்றிலுமுண்டு.

**பணிகளும் பொறுப்புகளும்**

மத்தியப் புலனாய்வு ஆணையத்தின் பணிகளும் பொறுப்புகளும்

1. பொதுப்பணியாளர் மீது கூறப்படும் ஊழல் புகார்களை விசாரித்தல்.
2. ஊழல் புகார்கள் பற்றி விசாரணையை முடுக்கி விட்டு முடித்தல்.
3. புலனாய்வு முகமை அமைப்புகளிடமிருந்து அறிக்கைகளைப் பெற்று அவைகளின் ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டு நெறிப்படுத்தல்.
4. மேல் நடவடிக்கைகளுக்காக ஊழல் வழக்குகளைத் த்வசம் எடுத்துக் கொள்ளல்.
5. பொது நிர்வாகத்தில் நேர்மையை நிலை நாட்டுவதற்காக ஊழல் சம்பந்தப்பட்ட விதிகளையும், நடைமுறைகளையும் மறுசீராய்வு செய்தல்.
6. ஆணையத்தின்நடவடிக்கைகளைப்பற்றியஆண்டுஅறிக்கையைஉள்துறைஅமைச்சகத்திடம் சமர்ப்பித்தல்.

**27 விதமான ஊழல்கள்!**

மத்தியப் புலனாய்வு ஆணையம் 27 விதமான ஊழல்களைக் கண்டறிந்து பட்டியலிட்டுள்ளது.

1. தரக்குறைவான வேலைகளை ஏற்றுக் கொள்வது.
2. பொதுப் பணத்தையும், பொருட்ளையும் கையாடல் செய்தல்.
3. கடமைகளைச் செய்ய கையூட்டு பெறுதல்.
4. ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கடன் வாங்கல்.
5. ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்த நிறுவனங்களுக்கும் சலுகைகள் அளித்தல்.
6. பிரயாணப்படி, வீட்டு வாடகை போன்றவற்றைத் தவறாகப் பயன்படுத்தி ஆதாயம் பெறல்
7. வருவாய்க்கு அதிகமான சொத்துக் குவிப்பு.
8. முன் அனுமதியின்றி அசையா சொத்துக்களை வாங்குதல்.
9. கவனக் குறைவால் அரசாங்கத்துக்கு இழப்பு ஏற்படுத்தல்.
10. பதவியையும் அதிகாரங்களையும் முறை கேடாகப் பயன்படுத்தல்.
11. நியமனம், பதவியமர்த்தல், பணிமாற்றம், பதவி உயர்வு ஆகியவற்றுக்கு சட்ட விரோதமாக ஆதாயம் பெறல்.
12. அரசு ஏழியர்களை சொந்த வேலைக்குப் பயன்படுத்தல்.
13. வயது, பிறப்பு, சமூகம் போன்றவற்றுக்குப் போலிச் சான்றிதழ்கள் வழங்கல்.

14. இரயில், விமானப் பயணங்களுக்கு இட ஒதுக்கீடு பெற முறைகேடான வழிகளைப் பின்பற்றல்
15. பண ஆணைகள், பதிவு செய்யப்பட்ட தபால்கள் போன்றவற்றை வழங்காதிருத்தல்.
16. புதிய தபால் தலைகளுக்குப் பதில் பயன்படுத்தப்பட்ட தபால் தலைகளைப் பயன்படுத்தல்.
17. இறக்குமதி ஏற்றுமதி உரிமங்கள் வழங்குவதில் முறைகேடுகள்.
18. அரசாங்க ஊழியர்களின் உதவியுடன் இறக்குமதி மற்றும் அனுமதிக்கப்பட்ட பங்கு ஒதுக்கீட்டில் முறைகேடு செய்தல்.
19. தொலைபேசி வழங்குவதில் முறைகேடு.
20. ஒழுங்கக் கயமை
21. பரிசுப் பொருட்களைப் பெறல்.
22. ஆதாயத்துக்காக வருமான வரி, சொத்துவரி போன்றவற்றைக் குறைத்து மதிப்பிடுதல்.
23. இரு சக்க வாகனங்கள், மகிழ்வுந்துகள் போன்றவற்றுக்கு வழங்கப்படும் முன்பணத்தில் முறைகேடு செய்தல்
24. வீடிழந்தோருக்கு இழப்பீடு வழங்குவதில் கால தாமதம்.
25. இடம் பெயர்ந்தோர் கோரிக்கைகளைத் தவறாகக் குறைத்து மதிப்பீடு செத்தல்.
26. குடியிருப்பு நிலங்களை வாங்கல், விற்றல் பற்றிய தொடர்புகளில் ஏமாற்றுதல்.
27. அரசுக் குடியிருப்புகளை முறைகேடாகப் பெறல்; வாடகைக்கு விடல். மத்தியப் புலனாய்வு ஆணையம் கண்டறிந்த ஊழல்கள் சில, கண்டறியாத ஊழல்கள் பல.

## ஆம்புட்ஸ்மன்

### குடிமக்களின் குறைகள்

மக்களின் சார்பாக உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் அமைப்பின் கீழ் மக்கள் ஊழல் முட்புதர்களுக்குள் சிக்கித் தவித்தனர். ஊழலுக்கு எதிரான சட்டங்களும், அமைப்புகளும், நடவடிக்கைகளும் அதிகரிக்க அதிகரிக்க ஊழலும் கட்டுக்கு அடங்காமல் பெறுகிற்று! இந்த விசித்திர விபரீதத்துக்குப் பலியானோர் பொது மக்களேயாவர். எனவே பாதிக்கப்பட்ட பொது மக்கள் கண்கள் கட்டப்பட்டு ஊழல் காட்டுக்குள் தள்ளப்பட்டவர்களாயினர்! தங்களது குறைகளைக் களைவதற்கா வழி தேடினர். குரலற்ற இவர்களுக்குக் குரல் கொடுப்பவர்களுக்காக ஏங்கித் தவித்தனர்!

### குறை தீர்த்தல்

ஊழலின் உக்கிரத்தையும், மக்களின் குறைகளையும் நன்கு அறிந்த இந்திய அரசியல் அமைப்புச் சட்ட கர்த்தாக்கள் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமைகளைச் சேர்த்தனர். சுதந்திரமாகச் செயல்படும் உச்சநீதிமன்றத்தை அமைத்தனர். மக்கள் பிரதிநிதிகளுக்குத் தொடர்ந்து பொறுப்பாகக் கூடிய அரசாங்க முறையை ஏற்படுத்தினர். எனினும் இவை யாவும் பொது மக்களின் குறைபாடுகளைப் போக்கப் பயன்படவில்லை. ஏனெனில் இந்த அமைப்புகள் சாதாரண மக்களின் அடிப்படை அன்றாடக் குறைகளைக் களைவதற்கு ஏற்றவையாக இல்லை. இவர்கள் துடுக்குத்தனமான

கர்வமிக்க அதிகாரிகள் அடக்குமுறைக்கு ஆளாகினர். அடித்திட்டு மக்களின் குறைகள் கேட்கப்படாமல் இருந்தன!

### மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள்/குறைதீர்ப்பு ஆணையர்

பொது மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1966 ஏப்ரல் மாதத துவக்கத்தில் பொதுக் குறை தீர்ப்பு ஆணையர் நியமிக்கப்பட்டார். இவரது பணிகள் இரண்டு.

1. குடிமக்களின் குறைகளைப் போக்குவதற்காக உள்ள அரசாங்க அமைப்புகளின் நடவடிக்கைகளை முறைப்படுத்தல்.
2. இவற்றுக்குத் திறமை மிக்க தலைமையைக் கொடுத்தல். அமைச்சகங்களில் குறை கேட்கும் அறைகள் அமைக்கப்பட்டன.

### ஆம்புட்ஸ்மன் அறிவிப்பு

ஆம்புட்ஸ்மன் என்ற சொல் சுவீடன் மொழியில் உள்ள ஆம்புட் என்ற சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். ஆம்புட் என்றால் ஒருவரின் பிரதிநிதி என்று பொருள். ஆம்புட்ஸ்மான் என்றால் நிர்வாக முறைகேட்டிலிருந்து குடிமக்களைக் காப்பாற்றும் பொருள். இந்திய லோக்பால் இந்த ஆம்புட் ஸ்மனை முன்னுதாரணமாகக் கொண்டு அமைக்கப்பட்ட அமைப்பாகும்.

### காரணங்கள்

1. அரசாங்க நடவடிக்கைகளின் அதீதப் பெருக்கம்.
2. அரசாங்க அதிகாரிகளிடம் உள்ள விருப்புரிமை அதிகாரங்கள்.
3. ஒப்படைக்கப்படும் சட்டங்கள்
4. அதிகாரிகளிடமிருந்து குடிமக்களின் எதிர்பார்ப்புகள்.
5. ஆட்சித்துறையை சட்டமன்றத் துறையால் கட்டுப்படுத்த முடியாமை.
6. நீதிமன்றங்களால் ஏற்படும் காலதாமதம், பணச்செலவு, இவற்றின் விளைவாகக் குடிமக்களிடம் ஆட்சி முறையின்மீது நம்பகத்தன்மை வெகுவாகக் குறைந்து விடுகிறது. அரசாலும், அதிகார வர்க்கத்தாலும், அரசியல்வாதிகளாலும் குறை தீர்க்க முடியாது என்ற எண்ணம் குடிமக்களிடையே மேலோங்கி உள்ளது. எனவே செயல் சுதந்திரமிக்க குறை தீர்ப்பு அமைப்புக்கான தேவை இன்றியமையாதது.

### லோக்பால் மசோதா

நாடாளுமன்ற மக்களவையில் முதன்முறையாக 1968ஆம் ஆண்டில் லோக்பால் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டு அடுத்த ஆண்டே (1969) நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதா மாநிலங்களவையில் விவாதிக்கப்பட்டபோது மக்களவை கலைக்கப்பட்டு விட்டது! அதன்பின் இந்த மசோதா பலமுறை (1971, 1977, 1985, 1989, 1996, 1998, 2001, 2004, 2011) அறிமுகப்படுத்தப்பட்டு நிறைவேற்ற முடியாமல் போயிற்று. இறுதியாக காலத்தின் கட்டாயத்தால் 2014இல் இம்மசோதா சட்ட மாக்கப்பட்டது.

**லோக்பாலின் நோக்கம்**

லோக்பால் மற்றும் லோகாயுக்தாக்கள் சட்டப்படி லோக்பால் நியமிக்கப்படுவதற்கு வழி வகுக்கப்பட்டது. இதன் நோக்கங்கள் இரண்டு.

1. பொதுப்பணிகளில் ஊழலை ஒழிப்பது.
2. பிரதமர் உள்ளிட்ட பொதுப்பணியாளர்களைப் பொறுப்பேற்கச் செய்தல்.

**அமைப்பு**

லோக்பால் அமைப்பில் தலைவர் மற்றும் 8 உறுப்பினர்கள் இடம் பெறுவர். உறுப்பினர்களில் 50 சதவிகித உறுப்பினர்கள் பட்டியல் வகுப்பார், சிறுபான்மையினர், பெண்கள் பிரதிநிதிகளாவார். தலைவரையும், உறுப்பினர்களையும் தேர்வுக்குழு தெரிவுக் குழு தெரிவு செய்யும். இத்தேர்வுக் குழுவில்

1. பிரதமர்.
2. மக்களவைத் தலைவர்.
3. மக்களவை எதிர்க்கட்சித் தலைவர்
4. உச்சநீதிமன்ற நீதிபதி
5. குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் சட்ட வல்லுநர் ஆகியோர் இடம் பெறுவர்.

**அதிகார எல்லை**

1. அனைத்துப் பொதுப்பணியாளர்கள்.
2. வெளிநாட்டு நன்கொடைகள் பெறும் அரசுசாரா அமைப்புகள் ஆகியவை அடங்கும். லோக்பாலை முன்மாதிரியாகக் கொண்டு மாநிலங்ள் லோகாயுக்தர்க்களை அமைக்க வேண்டும். இந்த அமைப்பை மாநிலச் சட்டத்தின் மூலம் லோக்பால் அமைக்கப்பட்ட 365 நாட்களுக்குள் தோற்றுவிக்க வேண்டும்.

**பணிகள்**

**லோக்பாலின் பணிகளும் பொறுப்புகளும்**

1. இந்திய புலனாய்வுக் குழு உள்ளிட்ட மத்தியப்புலனாய்வு அமைப்புகளை மேற்பார்வையிட்டு நெறிப்படுத்தல்
2. பிரதமரைத் தலைவராகக் கொண்ட உயர்மட்டக்குழு மத்தியப் புலனாய்வுக் குழு இயக்குநரை நியமிப்பதற்கான பரிந்துரை செய்யும். இத்தேர்வுக் குழுவில் பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோர் இடம் பெறுவர்.

பிரதமர், மத்திய அமைச்சர்கள், மூத்த அதிகாரிகள், லோக்பால் அதிகாரக் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

தற்போது சட்ட அமைச்சர்கள், மூத்த அதிகாரிகள், லோக்பால் அதிகாரக் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

தற்போது சட்ட அமைச்சகத்தின் கீழ் உள்ள குற்றவழக்கு இயக்குநரகம் மத்தியப் புலனாய்வு குழு இயக்குநர் கட்டுப்பாட்டின் கீழக் கொண்டு வரப்படும். மத்திய புலனாய்வு ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் இயக்குநரகத் தலைவர் நியமிக்கப்படுவார். இயக்குநராகத் தலைவரும், புலனாய்வு ஆணையரும் இரண்டாண்டு காலம் பதவியிலிருப்பார்கள்.

மத்தியப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் லோக்கபாலால் பணி மாற்றம் செய்யப்படலாம்.

பூர்வாங்கப் புலனாய்வு, விசாரணை, வழக்கு விசாரித்தல், பற்றிய விதங்கள் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

வழக்குகளை விசாரிக்க சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படும். பூர்வாங்க விசாரணையில் பொதுப்பணி அதிகாரிகள் நேரில் ஆஜராக வேண்டிய அவசியமில்லை.

பொதுப்பணியாளர்களுக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கான அதிகாரம் லோக்பாலுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மத்தியப் புலனாய்வுத்துறை லோக்பாலின் ஒப்புதலுடன் வழக்குரைஞர் குழுவை அமைக்கலாம். இதற்காக அரசாங்க வழக்குரைஞர்களைச் சார்ந்திருக்க வேண்டிய கட்டாயமில்லை.

**லோக்பால் அமைப்பு**

லோக்பால் அமைப்பு பொது வாழ்க்கையில் நேர்மையை நிலைநாட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதே போன்று நீதி நிர்வாகம் ஏழை பணக்காரர் என்ற வேறுபாடின்றி வழங்கப்படும்; அடித்தட்டு மக்களின் குரல் கேட்கப்படும்; சட்டத்தின் ஆட்சி அர்த்தமுள்ளதாகும்; அரசாங்கம் பாரபட்சமின்றி நடைபெறும்; தவறு செய்யும் உயர்மட்ட அரசியல் தலைவர்களும், அரசாங்க அதிகாரிகளும், பொதுப் பணியாளர்களும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாது; பொது மக்களுக்கு நீதியின் மீது நம்பிக்கை ஏற்படும் என்றெல்லாம் நம்பப்படுகிறது. லோக்பாலின் வெற்றி அதன் செயல்பாட்டைப் பொறுத்தே உள்ளது.

## லோக் அதாலத் மக்கள் நீதிமன்றம்

லோக் அதாலத் எனப்படும் மக்கள் நீதிமன்றம் சமாதான நிலை மற்றும் சமரசம் மூலம் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க இந்திய அரசால் உருவாக்கப்பட்ட நீதிமன்றம் ஆகும்.

**வரலாறு**

- இது ஒரு மாற்று முறையில் சச்ரவுகளுக்குத் தீர்வு காணும் ஒரு வழிமுறையாகும்.
- லோக் என்பது மக்களையும் அதாலத் என்பது நீதிமன்றத்தையும் குறிக்கும்.
- முதல் முதலில் குஜராத் மாநிலத்தில் ஜீனாகார் என்ற இடத்தில் மார்ச் 14, 1982 அன்று லோக் அதாலத் எனப்படும் மக்கள் நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டது.
- மக்கள் நீதிமன்றம் மூலம் கோர்ட்டில் நிலுவையில் இருக்கும் வழக்குகள் மட்டுமல்லாமல் கோர்ட்டுக்கு வர இருக்கும் வழக்குகளுக்கும் தீர்வு கண்டுவிடலாம்.
- இந்த நீதிமன்றங்களில் தீர்வு காணப்பட்டால் அதற்கு மேல் முறையீட்டிற்குப் போகமுடியாது.

**தீர்க்கப்படும் வழக்கு வகைகள்**

- காசோலை தொடர்பான வழக்குகள்.
- வாகன விபத்து வழக்குகள்
- குடும்பப் பிரச்சனைகள் தொடர்பான வழக்குகள்
- தொழில் தகராறுகள்
- தொழிலாளர் தொடர்பான வழக்குகள்
- குற்றவியல் வழக்குகளில் சமாதானம் ஏற்படுத்திக் கொள்ளத் தன்மையுள்ள வழக்குகள்.
- வங்கிக் கடன் பிரச்சினைகள்.
- வாடகை விவகாரங்கள்.
- விற்பனை வரி.
- வருமான வரி.
- மறைமுக வரி தொடர்பான பிரச்சினைகள்.

## தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

- தகவல் அறியும் உரிமைச் சட்டம் (மத்திய சட்டம் - 22) 2005, அக்டோபர் 2005 முதல் அமலுக்கு வந்துள்ளது.
- இச்சட்டத்தின்கீழ் தமிழ்நாடு அரசு தமிழ்நாடு தகவல் அறியும் உரிமை (கட்டணங்கள்) விதிகள் 2005, அரசாணை (சிலை) எண் 989, பொது (பணியாளர் - தொகுதி 1 மற்றும் சட்ட மன்றம்) துறை நாள் 07-01-2005 வெளியிடப்பட்டது.

**I. நோக்கம்:**

- ஜம்மு காஷ்மீர் மாநிலம் நீங்கலாக நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும், அரசு அதிகாரிகளிடம் இருந்து தகவல்களைப் பெறும் உரிமையை அடிப்படை உரிமையாக மக்களுக்கு வழங்கும் வகையில் இச்சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- அரசு அதிகாரிகளின் செயல்பாடுகளில் வெளிப்படைத் தன்மையைக் கொண்டு வருவதையும், ஊழலைக் கட்டுப்படுத்துவதையும் அரசுத்துறைகள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவைகள் மக்களுக்குக் கட்டுப்பட்டுள்ளதை உறுதிசெய்வதையும் இச்சட்டம் நோக்கங்களாகக் கொண்டுள்ளது. மக்களுக்குத் தகவல்கள் வழங்குவதற்கான ஒரு செயல் வடிவத்தை இச்சட்டம் உருவாக்கியுள்ளது.
- தன்னியல்பாகவும், கோரிக்கையின் அடிப்படையிலும் வழங்க வேண்டியதை அரசு அதிகாரிகளின் முக்கியக் கடமையாக இச்சட்டம் உருவாக்கியுள்ளது.

- மக்களுக்குத் தகவல்கள் அளிப்பதைத் தடை செய்யும் அரசு ஆவணங்கள் ரகசியச் சட்டம் 1923 போன்ற முந்தைய அனைத்துச் சட்டங்கள் அரசாணைகள் போன்ற அனைத்தையும் இப்புதிய சட்டம் ரத்து செய்கிறது.

**2. அதிகார வரம்பு**

- மத்திய மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளால் சொந்தமாகவோ, நேரடியாகவோ அல்லது நிதி உதவி மூலமாகவோ உருவாக்கப்பட்டுள்ள அனைத்து விதமான அலுவலகங்களும் இச்சட்டத்தின் கீழ் வருகின்றன (இந்த வரம்பிற்குள் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் நகரமன்றங்களும் கிராமப் பஞ்சாயத்துகளும் கூட உள்ளடங்கியுள்ளன) மேற்கூறிய அரசு மற்றும் அரசு நிர்வாகங்களின் நேரடிக் கட்டுபாட்டிலோ, நிதி உதவியிலோ செயல்படும் அனைத்து அலுவலகங்களும் தகவல் அறியும் உரிமையை மக்களுக்கு வாங்கக் கடமைப்பட்டுள்ளன.
- அரசின் நிதி உதவியை நேரடியாகவோ மறைமுகமாகவோ பெறும் அனைத்து அரசு சாரா அமைப்புகள் மீதும் இச்சட்டம் அமல்படுத்தப்படும்.

**3. தகவல் என்பது**

- பதிவேடுகள், ஆவணங்கள், அலுவலகக் குறிப்புகள், மின் அஞ்சல்கள், கருத்துரைகள் ஆலாசனைகள், பத்திரிக்கைக் குறிப்புகள் சுற்றறிக்கைகள், ஆணைகள், தினசரிக் குறிப்புகள், ஒப்பந்தங்கள் அறிக்கைகள், மாதிரிகள், முன்வடிவங்கள், மின்னணு வடிவில் பதிவாகியுள்ளன தகவல்கள், தரவுகள் என அனைத்தையும் மக்கள் அறிந்து கொள்ள உரிமை உள்ளது.

**4. பதிவேடுகள் என்பது**

- அனைத்து விதமான ஆவணங்கள் கையெழுத்து மூலப் பிரதிகள் மற்றும் கோப்புகள்
- நுண் சுருள், நுண் புகை, நகல் தொலைா; புகைப்பட நகல் போன்ற வடிவங்களில் பதிவு செய்யப்பட்ட ஒரு ஆவணத்தின் நகல்கள்.
- நுண் சுருளில் (பெரிதுப்படுத்தியோ அல்லாமலோ) பொதியப்பட்ட உருவம், உருவங்களின் மறு பதிப்புகள்.
- கணினி போன்ற சாதனங்கள் மூலம் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் போன்றவை அனைத்தும் தகவல்கள் அறிந்து கொள்வதற்கான பதிவேடுகள் ஆகும்.

**5. தகவல் பெறும் உரிமை என்பது**

- பணிகள் ஆவணங்கள், பதிவேடுகளை ஆய்வு செய்யும் உரிமை.
- குறிப்புகள், சுருக்கங்கள் போன்றவற்றைப் பெறும் உரிமை அல்லது சான்று நகல்கள் பெறும் உரிமை.
- மாதிரிகள் எடுக்கும் உரிமை.

- மின்னணு வடிவத்தில் தகவல்களைப் பெறும் உரிமைபொதுநலன் தொடர்புடைய அனைத்துத் தகவல்களையும் பெறும் உரிமை.
- நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் தகவல்களை மறுக்கக்கூடாது. எந்த நாளும் சட்டங்களை உருவாக்கும் அமைப்புகளுக்குத் தகவல்களை மறுக்கக்கூடாது.

**6. பாதுகாக்கப்பட வேண்டிய ரகசியங்கள்**

- நாட்டின் இறையாண்மை, ஒருமைப்பாடு, பாதுகாப்பு, நாட்டின் பொருளாதார மற்றும் அறிவியல் நலன்கள், வெளியுறவு தொடர்பான தகவல்கள் போன்றவை பாதுகாக்கப்பட வேண்டியவை.

## மத்திய தலைமைச் செயலகம்

மத்திய ஆட்சியின் அனைத்து அமைச்சகம் மற்றும் துறைகளின் ஒட்டு மொத்த தொகுப்பே மத்திய தலைமைச் செயலகம் என்று அழைக்கப்படுகிறது. அரசமைப்பின் உறுப்பு 77இன் படி குடியரசுத்தலைவர் பல்வேறு அமைச்சகத்திற்கு பணியை ஒதுக்கீடு செய்யும் அதிகாரம் பெற்றுள்ளார்.

மத்திய தலைமைச் செயலகத்தின் பணிகள்

1. அமைச்சர்களின் கொள்கையாக்கம் மற்றும் நாடாளுமன்றச் செயல்பாடுகளில் உதவி புரிதல்.
2. சட்டங்கள் வரைதல், விதிகள் மற்றும் கொள்கைகளின் செயல் முறைகள்
3. திட்டமிடல், திட்ட உருவாக்கம்
4. அமைச்சகத்தின் செலவினங்கள் மற்றும் நிதிநிலை அறிக்கை சார்ந்த பணிகள்
5. கொள்கைகள் மற்றும் திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதை மேற்பார்வையிடுதல் கட்டுப்படுத்துதல்.
6. அமைச்சகம் மற்றும் துறை பணியாளரின் பணிகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை உருவாக்குதல்
7. அமைச்சகத்தின் அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து மேற்பார்வையிடல் மற்றும் மாநில நிர்வாகத்துடன் தொடர்பில் இருத்தல்.

## மத்திய அரசு அமைச்சர்கள் / துறை

**1. விவசாயம் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம்**

- விவசாய ஆராய்ச்சி மற்றும் கல்வித்துறை
- விவசாயம், ஒத்துழைப்பு மற்றும் விவசாயிகளின் நலத்துறை
- கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை

**2. ஆயுஷ் அமைச்சகம், இரசாயணம் மற்றும் உரங்கள் அமைச்சகம்**

- இரசாயணம் மற்றும் பெட்ரோகெமிக்கல்ஸ்துறை
- உரத்துறை
- மருந்துகள் துறை

**3. உள்நாட்டு விமான போக்குவரத்து அமைச்சகம், நிலக்கரி அமைச்சகம், வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சகம்**

- வர்த்தகத்துறை
- தொழில் கொள்கை மற்றும் ஊக்குவிப்பு துறை

**4. தொடர் அமைச்சகம்**

- தபால் துறை
- தொலைத்தொடர்பு துறை

**5. நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம்**

- நுகர்வோர் விவகாரத்துறை
- உணவு மற்றும் பொது விநியோகத்துறை

**6. பொதுநிறுவன விவகார அமைச்சகம், கலாச்சார அமைச்சகம் பாதுகாப்பு அமைச்சகம்**

- பாதுகாப்புத்துறை
- பாதுகாப்பு தயாரிப்புத்துறை
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு துறை
- முன்னாள் ராணுவத்தினர் நலத்துறை

**7. வடகிழக்கு மண்டல மேம்பாட்டு அமைச்சகம், குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகம், புவியியல் அமைச்சகம்**

**8. உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைச்சகம், சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம்**

- சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை
- சுகாதார ஆராய்ச்சி துறை, சுகாதார மற்றும் குடும்ப நலத்துபை

**9. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம், வெளிவிவகார அமைச்சகம், நிதி அமைச்சகம்**

- பொருளாதாரம் துறை
- செலவுத்துறை
- நிதி சேவைகள் துறை
- முதலீட்டு மற்றும் பொது சொத்து மேலாண்மைத்துறை
- வருவாய்த்துறை

**10. கனரக தொழிற்சாலைகள் மற்றும் பொதுத்துறை அமைச்சகம்**

- கனரகத் தொழிற்துறை
- பொது நிறுவனங்கள் துறை

**11. சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் அமைச்சகம், சுரகங்கள் அமைச்சகம், புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகம், பஞ்சாயத்துராஜ் அமைச்சகம், நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சகம், பணியாளர், பொதுமக்கள் குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதியங்கள் அமைச்சகம்**

- நிர்வாக சீர்திருத்த மற்றும் பொது குறைபாடுகள் துறை (DARPG)
- ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர் நலத்துறை
- பணியாளர் மற்றும் பயிற்சித்துறை

**12. பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம், மின்வலு அமைச்சகம், ரயில்வே அமைச்சகம், சாலைபோக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம், கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகம்**

- கனிம வளங்கள் துறை
- கிராம மேம்பாட்டுத்துறை

**13. அணுசக்தி துறை விண்வெளித்துறை**

**14. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்**

- பயோடெக்னாலஜி துறை (DBT) இந்திய அரசு
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை (DST)
- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சித்துறை (DSIR)

**15. உள்நாட்டு விவகார அமைச்சகம் நிறுவனக் கட்டமைப்பு**

- மத்திய ஆயுதப்படை
- மத்திய போலீஸ் அமைப்பு
- எல்லை மேலாண்மைத்துறை
- வீட்டுவசதித்துறை
- உள்நாட்டு பாதுகாப்புத்துறை
- ஜம்மு மற்றும் காஷ்மீர் விவகாரத்துறை (ஜம்மு மற்றும் காஷ்மீர்)
- அதிகாரப்பூர்வ மொழித்துறை
- மாநிலங்கள் துறை

**16. தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகம்**

**17. நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம்**

**18. கப்பல் அமைச்சகம் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முயற்சி அமைச்சகம் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்**

- குறைபாடுகள் கொண்ட நபர்களின் அதிகாரமளித்தல் துறை
- சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை

**19. புள்ளிவிவரம் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் இரும்பு அமைச்சகம் ஜவுளி அமைச்சகம் சுற்றுலா அமைச்சகம் பழங்குடியினர் விவகாரங்கள் அமைச்சகம் நீர்வள ஆதார, நதி அபிவிருத்தி மற்றும் கங்கா புத்துணர்வு அமைச்சகம் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம்**

- விளையாட்டுத் துறை
- இளைஞர் விவகாரங்கள் துறை

**20. வீடமைப்பு மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் மனித வள மேம்பாட்டு அமைச்சகம்**

- உயர்கல்வித்துறை
- பள்ளி கல்வி மற்றும் எழுத்தறிவு துறை

**அமைச்சரவைச் செயலகம்** (Cabinet Secretariat)

**பணிகள்**

அமைச்சரவைச் செயலகம் பிரதமரின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்குகிறது. இதன் நிர்வாகத் தலைவர் அமைச்சரவை செயலார் (Cabinet Secretary) ஆவார். அவரே இந்தியக் குடிமைப்பணி அலுவலர்களின் தலைவராக கருதப்படுகிறார். இந்திய அரசு (அலுவல்கள் ஒதுக்கீடு) 1961 சட்டப்படி அமைச்சரவைச் செயலகத்தின் பணிகள் மற்றும் செயல்பாடுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அவை வருவமாறு:

**அமைச்சரவை செயலகத்தின் அமைப்பு முறை**

அமைச்சரவை செயலகத்தின் மூன்று முக்கிய பிரிவுகள் :

குடிமைப் பிரிவு இராணுவப் பிரிவு நுண்ணறிவுப் பிரிவு

**குடிமைப்பிரிவு**

இப்பிரிவே மத்திய அமைச்சரவைக்கு ஆலோசனைகள் மற்றும் உதவிகள் வழங்குகின்றன.

**இராணுவப் பிரிவு**

இப்பிரிவு அமைச்சரவையின் இராணுவக் குழு செயலக உதவிகளை வழங்குகின்றது.

**நுண்ணறிவுப் பிரிவு**

இப்பிரிவு அமைச்சரவையின் கூட்டுப் புலனாய்வுக் குழு சார்ந்த செயல்பாடுகளை கையாளுகின்றது.

**பிற அமைப்புகள்**

ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு பாதுகாப்பு இயக்குநர், சிறப்பு பாதுகாப்புக் குழு, கூட்டு நுண்ணறிவுக் குழு இயக்குநர், பொது மக்கள் குறைகள் டி.ஜி.பி. (1998), தேசிய ஆணையம், இராசயன ஆயுத ஒப்பந்தங்கள்.

தலைமைச் செயலகமானது இந்திய அரசாங்கச் சட்டம் (அலுவல் பரிமாற்றம்) 1961 விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்புடையது. இச்செயலகம் அரசு கொள்கை முடிவு எடுப்பதில் அமைச்சகத்தற்கிடையேயான ஒருங்கிணைப்பு ஏற்படுத்துதல், அமைச்சகங்கள் / துறைகள் இடையே காணப்படும் வேறுபாடுகளைக் களைதல், செயலக நிலைக் குழுக்கள்/தற்காலிகக் குழுக்கள் மூலம் ஒருமித்த கருத்து உருவாக்குதல் ஆகிய வழிகளில் அமைச்சரவைச் செயலகம் அரசுக்கு உதவுகிறது. நாடு பெரும் நெருக்கடிகளைச் சந்திக்கும் காலங்களில் மேலாண்மை செய்தல், அத்தகைய காலங்களில் பல்வேறு அமைச்சரகங்களை ஒருங்கிணைத்து நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகியனவும் அமைச்சரவைச் செயலகப் பணிகள் தாம்.

## அமைச்சரவைக் குழுக்களுக்கு ஆதரவு

அமைச்சரவைச் செயலகம், அமைச்சரவை மற்றும் அமைச்சரவைக் குழுக்களுக்கு கீழ்காணும் உதவிகளை நல்கிறது.

- பிரதமரின் ஆணைப்படி, அமைச்சரவை மற்றும் அமைச்சரவைக் குழுக்களின் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.
- கூட்ட நிரல்களை முடிவு செய்து சுற்றுக்கு அனுப்புதல்.
- கூட்டப்பொருள் தொடர்பு கோப்புகளை தயார் செய்து சுற்றுக்கு அனுப்புதல்
- பிரதமரின் ஒப்புதலுக்குப் பின் கூட்ட விவாதங்களைத் தொகுத்தல் சுற்றறிக்கையாக அனுப்புதல்
- அமைச்சரவைக் கூட்ட ஆவணங்களை அமைச்சரவைச் செயலகப் பாதுகாப்பில் பராமரித்தல்

## அமைச்சரவைச் செயலாளர்

இந்தியாவில் அமைச்சரவைச் சயலாளர் அலுவலகம் பதவியானது 1950-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்தியாவின் முதல் அமைச்சரவை செயலாளர் என்.ஆர்.பிள்ளை ஆவார். அமைச்சரவை செயலரே அமைச்சரவை செயலகத்தின் தலைவர் ஆவார். இந்திய குடிமைப் பணிகளில் அமைச்சரவை செயலர் பதவியே உயரியது. இதனால் குடிமைப் பணி அலுவலர்கள் மத்தியில் இவரே முதன்மையானவர்.

**மத்திய அரசு - உயர்மட்ட நிர்வாகம்**

குடியரசுத் தலைவர்
துணைக் குடியரசுத் தலைவர்
அமைச்சரவைச் செயலகம்
இந்தியத் தேர்தல் ஆணையம்
ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம்
தேசிய மனித உரிமைகள் ஆணையம்
இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (சி.ஏ.ஜி.)
இந்தியக் கணக்கு தணிக்கை துறை
நிதி ஆயோக்
தேசிய மகளிர் ஆணையம்
பதினைந்தாவது நிதி ஆணையம்
சிறுபான்மையோர் தேசிய ஆணையம்
காப்பீடு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம்
முதன்மை அறிவியல் ஆலோசகர் ஆணையம்

## பிரதமர் அலுவலகம் (PMO)

பல்வேறு வகை ஆதார அலுவலர்கள் பிரதமருக்கு அறிக்கைகள் அளிக்க வேண்டியுள்ளதால், பிரதமர் அலுவலகம் என்பது அவரின் கீழ் பணிபுரியும் அத்தகைய பல்வேறு அலுவலர்களை உள்ளடக்கியது. பிரதமர் அலுவலகம் முதன்மைச் செயலரின் கீழ் செயல்படுகிறது. 1977ஆம் ஆண்டு வரை பிரதமர் அலுவலகம் பிரதமரின் செயலகம் என்று அழைக்கப்பட்டது. பின்னர் மொரார்ஜி தேசாய் காலத்தில் பிரதமர் அலுவலகம் என்று மாற்றப்பட்டது.

**தலைமை அறிவியல் ஆலோசகர் அலுவலகம்**

தலைமை அறிவியல் ஆலோசகர் அலுவலகம் நவம்பர் 1999ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இவற்றின் பணிகள்:

- படைப்பாக்க செயல்பாடுகள் மற்றும் பன்முனைச் செயல்பாடுகளுக்கான ஆதார அமைப்புகளை உருவாக்கும் வகையில் அறிவியல் சார் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் உத்திகளை உருவாக்குவது.
- அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், தொழில் அமைப்புகளுடன் இணைந்து உள்கட்டமைப்பு பொருளாதார மற்றும் சமூகம் போன்ற முக்கியத் துறைகளில் அறிவியல் தொழில்நுட்ப இலக்குகளை நிர்ணயித்தல்.

- பிரதமரின் அறிவியல் தொழில்நுட்ப ஆலோசனை குழுவிற்கும் தனது பங்களிப்பை வழங்குதல்.
- தலைமை அறிவியல் ஆலோசகர் அலுவலகம் நிர்வாக ரீதியாக ஆகஸ்ட் 2018 முதல் அமைச்சகச் செயலகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.

பிரதமர் அலுவலகம் பிரதமருக்கு செயலக ரீதியான உதவிகளை வழங்ககின்றது. இதன் தலைவர் பிரதமரின் முதன்மைச் செயலர் ஆவார். பிரதமர் அலுவலகம் ஊழல் எதிர்ப்பு பிரிவு மற்றும் பொது மக்கள் குறை கேட்டல் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கியது. இவ்வலுவலகம் பிரதமர் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில குடிமைப் பணி அலுவலர்கள் துணையுடன் அரசை ஒருங்கிணைக்கின்றது. மேலும், பிரதமர் பிரதம அலுவலக உதவியுடன் தான் அனைத்து அமைச்சகங்கள், ஆளுநர்கள் மற்றும் மாநிலங்களுடன் அலுவல்பூர்வ தொடர்பில் இருக்கிறார்.

## அரசு சார்ந்த மற்றும் அரசு சாராத ஆணையங்கள்

## தேர்தல் ஆணையம்

தேர்தல் ஆணையம் மற்றொரு அகில இந்திய சிறப்புடைய சுதந்திரமாகச் செயல்படும் அமைப்பாகும். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 324ஆவது சரத்து தேர்தல் ஆணையம் பற்றிக் குறிப்பிடுகிறது. குடியரசுத் தலைவர் தேர்தல் ஆணையத்தை அமைக்கிறார். இந்த ஆணையம் தலைமை ஆணையரையும், குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் பிற ஆணையர்களையும் கொண்டது. குடியரசுத் தலைவர் தேர்தல் ஆணையரைக் கலந்தாலோசித்துப் பிற பிராந்திய ஆணையர்களையும் நியமிக்கலாம். இவர்கள் தலைமை ஆணையருக்குத் துணையாக இருப்பார்கள். தலைமைத் தேர்தல் ஆணையர், பிராந்திய தேர்தல் ஆணையர்கள் ஆகியோரின் பதவிக்காலம், பணி நிபந்தனைகள் ஆகியவற்றை குடியரசுத் தலைவரே தீர்மானிக்கிறார்.

### பல உறுப்பினர் அமைப்பு

1950ஆம் ஆண்டிலிருந்து 1950-1989 வரை தேர்தல் ஆணையம் ஒரு நபர் அமைப்பாகச் செயல்பட்டு வந்தது. இதன் வேலைப் பளு அதிகரித்தமையால் குடியரசுத் தலைவர் மேலும் இரு தேர்தல் ஆணையர்களை நியமித்தார். அதிலிருந்து தேர்தல் ஆணையம் பல உறுப்பினர் அமைப்பாக செயல்பட்டு வருகிறது. 1990இல் தேர்தல் ஆணையம் மீணடும் ஒரு நபர் அமைப்பாக்கப்பட்டு பின்னர் 1993இல் ரும்பும் பல உறுப்பினர்கள் அமைப்பாக்கப்பட்டது!

### பணிப் பாதுகாப்பு

தேர்தல் ஆணையர்களின் பணிக்குச் சட்டப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் உச்சநீதிமன்ற நீதபதிக்கு இணையாக ஊதியம் பெறுகின்றனர். இவர்களது ஊதியம், ஊதியப் படிகள், பிற சலுகைகள் ஆகியவற்றில் எவ்வித வேறுபாடும் இல்லை; சம ஊதியமும் சலுகைகளையும் பெறுகின்றனர். ஆணயர்களின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை. இவர்கள் எப்போது வேண்டுமாயினும் பதவி விலகலாம் அல்லது குடியரசுத் தலைவரால் பதவி நீக்கம்

செய்யப்படலாம். ஆணையர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்படின் இவர்களுக்குள் பேசி இருவரது முடிவு ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

**அதிகாரங்களும் பணிகளும்**

தேர்தல் ஆணையர்களின் அதிகாரங்களும் பணிகளும் தேர்தல் சம்பந்தப்பட்டவை. தேர்தல் ஆணையம் 1. நாடாளுமன்றத்துக்கு; 2.மாநில சட்டமன்றத்துக்கு; 3. குடியரசுத் தலைவர் மற்றும் குடியரசுத் துணைத் தலைவருக்குத் தேர்தல்களை நடத்துகிறது. இவர்களது அதிகாரங்களும் பணிகளும்:

1. நாடாளுமன்றத்தின் தொகுதி வரையறை ஆணைய சட்டங்கள்படி (Delimitation Commission Acts of Parliament, 1952, 1962, 1972, 2002) இந்தியா முழுவதும் தேர்தல் தொகுதிகளைத் தீர்மானித்தல்.
2. அவ்வப்போது தேர்தல் பட்டியல்களைத் தயாரித்தல், வாக்காளர்களைப் பதவு செய்தல்.
3. தேர்தல் தேதிகளை அறிவித்தல், வாக்காளர் விண்ணப்பங்களைப் பெற்றுப் பரிசீலித்தல்.
4. அரசியல் கட்சிகளை அங்கீகரித்தல், அவைகளுக்குச் சின்னங்களை வழங்கல். அரசியல் கட்சிகளைப் பதிவு செய்தல். இவை பற்றிய வழக்குகளை விசாரித்தல்.
5. தேர்தல் ஏற்பாகள் பற்றிய தகராறுகளைத் தீர்ப்பதற்கு அதிகாரிளை நியமித்தல்.
6. அரசியல்கடசிகளும், வேட்பாளர்களும் பின்பற்ற வேண்டிய நடத்தை விதிகளை வகுத்தல்
7. அரசியல் கட்சிகள் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் தேர்தல் விளம்பரம் செய்வதற்கான அட்டவணை தயாரித்தல்.
8. நாடாளுமன்ற, மாநில சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதியின்மை, கள்ள வாக்களித்தல், தேர்தல் சாவடிகளைக் கைப்பற்றல், குடியரசுத் தலைவர் ஆட்சியில் தேர்தல் நடத்துதல், வன்முறையில் ஈடுபடல் போன்றவை குறித்து குடியரசுத் தலைவருக்கு ஆலோசனை கூறல்.
9. தேர்தல் நடத்துவதற்குத் தேவையான அதிகாரிகள் அலுவலர்களைக் கொடுக்குமாறு குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநரைக் கேட்டுக் கொள்ளல்.
10. இந்தியா முழுவதும் தேர்தல்கள் சுதந்திரமாகவும், நியாயமாகவும், அமைதியாகவும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல். இவற்றுக்குத் தேர்தல் ஆணையர்களுக்கு உதவி செய்ய துணைத் தேர்தல் ஆணையர்கள் உள்ளனர். இவர்கள் அரசுப் பணியாளர்கள்.

## நிதி ஆணையம்

**நிதிப் பகிர்வு**

நிதி ஆணையம் சுதந்திர இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட மகத்தான முயற்சியாகும். இது ஒரு தனித்தன்மையுடைய அரசியல் அமைப்புச் சட்ட அமைப்பாகும். இதற்கு இணையாகநிதி ஆணையம் வேறு எந்த கூட்டாட்சி நாட்டிலும் இல்லை! கூட்டாட்சி நாட்டின் அடையாளமாகத் திகழ்வது நிதி ஆணையம் ஆகும்.

### இருவகைப் பகிர்வு

கூட்டாட்சிக் கூறுகளைக் கொண்ட இந்திய அரசியல் அமைப்பில் ஆட்சி அதிகாரங்கள் மத்திய மாநில அரசுகளுக்கு இடையே பகிர்ந்து அளிக்கப்படுகிறது. எனவே நிதி ஆதாரங்களை மத்திய மாநில அரசுகள் பகிர்ந்து கொள்ள வேண்டியது இன்றியமையாதது. பகிர்வு இரு வகைப்படும்.

1. நேர்நிமிர் பகிர்வு (Vertical Distribution)
2. கிடைமட்ட பகிர்வு (Horizontal Distribution)

நேர்நிமிர் / நெடுகிடை / மேல்கீழ் பகிர்வு என்பது மாநில அரசின் நிதிப் பற்றாக்குறையை மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறையை மத்திய அரசின் உபரி நிதியிலிருந்து (Surplus Revenue) பகிர்ந்தளித்தல். கிடைமட்ட / படுகிடை / படுக்கைப் பகிர்வு என்பது மத்திய மாநில அரசுகளுக்கிடையே நிலவும் நிதிச் சமமின்மை (Revenue Imbalance)யாகும். எனவே மத்திய மாநில நிதிப் பகிர்வுகாக அமைக்கப்படுவதே நிதி ஆணையமாகும்.

### சட்ட அங்கீகாரம்

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 280வது சரத்து நிதி ஆணையம் அமைப்பது பற்றிக் குறிப்பிடுகிறது. 1951ஆம் ஆண்டு இயற்றப்பட்ட நிதி ஆணையச் சட்டம் (Finance Commission Act 1951) நிதி ஆணையம் அமைப்பது பற்றிய விவரங்களை கொடுக்கிறது. எனவே நிதி ஆணையம் அரசியல் அமைப்புச் சட்ட அங்கீகாரம் பெற்ற அமைப்பாகும்.

### அமைப்பு

நிதி ஆணையம் குடியரசுத் தலைவரால் அமைக்கப்படுகிறது. இந்த ஆணையத்தில் தலைவரும், 4 உறுப்பினர்களும் உள்ளனர். இவர்களது பதவிக்காலம் குடியரசுத் தலைவரால் தீர்மானிக்கப்படுகிறது. ஆணையத் தலைவரும் உறுப்பினர்களும் மறுநியமனத்துக்குத் தகுதியானவர்கள். நிதி ஆணையம் 5 ஆண்டுகளுக்கொரு முறை அமைக்கப்படுகிறது.

### தகுதிகள்

நிதி ஆணையத் தலைவருக்குப் பொது வாழ்க்கையில் அனுபவம் இருக்க வேண்டும்! நான்கு உறுப்பினர்களும் 1. உயர்நீதிமன்ற நீதிபதியாய் இருக்க வேண்டும் அல்லது 2. நிதி மற்றும் கணக்கு வைப்பு நிபுணராக இருக்க வேண்டும் அல்லது 3. நிதி நிர்வாக வல்லுநராகி இருக்க வேண்டும் அல்லது 4. பொருளாதார சிறப்பறிவு பெற்றிருக்க வேண்டும்.

### பணிகள்

நிதி ஆணையத்தின் பணிகள் அரசியல் அமைப்புச் சட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன.

1. மத்திய மாநில அரசுகளுடைக்கிடையே பிரிக்ககூடிய வரிகளை முடிவு செய்கிறது.
2. இதே போன்று அரசாங்க உதவி மானியங்கள் எந்த அடிப்படையில் பிரிக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கிறது.

3. நம்பத்தக்க நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு குடியரசுத் தலைவர் கோரும் தகவல்களை நிதி ஆணையம் தருகிறது.
4. பரிந்துரைகள், விளக்கக் குறிப்பு, அரசாங்கம் மேற்கொண்ட நிதி நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையை அளிக்கிறது.
5. மாநில தொகுப்பு நிதியை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளைக் கூறுகிறது.
6. மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டிய மானியத் தொகைபற்றிய ஆலோசனையை அளிக்கிறது. நிதி ஆணையம் அளிக்கும ஆலோசனைகள் மத்திய மாநில அரசுகளைக் கட்டுப்படுத்தாது! இவை ஆலோசரனைகள் மட்டுமே! இதுவரை 14 நிதி ஆணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### மாநில நிதி ஆணையம்

மாநில நிதி ஆணையம் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் சரத்து 243ன் படி அமைக்கப்படுகிறது. இதன் பதவிக்காலம் 5 ஆண்டுகள் இதன் பிரதான பணி பஞ்சாயத்துக்களின் நிதி நிலையைப் பரிசீலித்துப் பரிந்துரைகள் செய்வதாகும். இந்த ஆணையத்தின் கடமைகளாவன :

1. மாநில நிகர வருவாயையை மாநிலத்துக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் பகிர்ந்தளித்தல்.
2. பஞ்சாயத்துக்களுக்குப் பகிர்ந்தளிக்கும் வரி வருவாயைத் தீர்மானித்தல்.
3. பஞ்சாயத்துக்களுக்குத் தொகுப்பு நிதியிலிருந்து கொடுக்க வேண்டிய உதவி மானியத் தொகையை முடிவு செய்தல்.
4. பஞ்சாயத்துக்களின் நிதி நிலையை மேம்படுத்துவதற்கான வழிவகைகளைக் கண்டறிதல.
5. பஞ்சாயத்துக்களின் நிதி நிலை பற்றி ஆளுநர் கோரும் தகவல்களைத் தரல்
6. இதே போன்ற பணிகளை நகராட்சிகளுக்கும் மேற்கொள்ளல். இவை பற்றிய அறிக்கையை சமர்ப்பித்தல்.

### நிதி ஆயோக்

#### நிதி ஆயோக் என்றால் என்ன?

நிதி ஆயோக் என்றால் இந்தியாவை மாற்றும் தேசிய நிறுவன சிந்தனைக் களம் என்று பொருள். இது சமஸ்கிருதத்தில் ராஷ்ட்ரீய பரிவர்த்தன் சான்ஸ்தா என்று கூறப்படுகிறது.

#### நோக்கம்

நிதி ஆயோக்கின் அடிப்படை நோக்கம் நாட்டின் பொருளாதார முடிவெடுப்பதில் மாநில அரசுகளை ஈடுபடுத்தவும், பங்கேற்கச் செய்யவும் ஊக்கம் அளிப்பதாகும். மேலும் திட்டமிடும் போது கீழிருந்து மேல் அணுகுமுறையைப் பின்பற்றுவது சிறப்பு நோக்கமாகும். அதுமட்டுமல்ல நிதி ஆயோக் மூலம் இந்தியாவில் கூட்டுறவு போட்டி கூட்டாட்சியை ஏற்படுத்துவது இந்நிறுவனத்தின் கட்டளையாகக் கருதப்படுகிறது. சுருங்கக்கூறின் மாநில அரசாங்கங்கள் மற்றும் ஒன்றியப் பகுதிகளின் பொருளாதாரப் பிரதிநிதித்துவத்துக்கான அமைப்பே நிதி ஆயோக் ஆகும்.

**துணைக் குழுக்கள்**

இதற்காக பின்வரும் 3 முக்கிய விவகாரங்களைக் கவனிக்க முதலமைச்சர்களைக் கொண்ட 3 துணைக் குழுக்களை அமைத்துள்ளார் பிரதமர் மோடி.

1. மத்திய அரசின் திட்டங்கள்
2. திறமை மேம்பாடு
3. பாரத தூய்மைத் திட்டம்

**நிதி ஆயோக்கின் திட்டம்**

2015 ஜனவரி முதல் தேதி மத்திய அரசாங்கம் நிதி ஆயோக் அமைக்கப்பட்டதைப் பற்றிய அறிவிப்பை வெளியிட்டது. அதன் முதல் கூட்டம் 2015 பிப்ரவரி 8ஆம் தேதி பிரதமர் மோடியின் தலைமையில் நடைபெற்றது. நிதி ஆயோக்கின் உறுப்பினர்கள்.

1. பிரதமர் தலைவர்
2. ஆட்சிமன்றத்தில் முதலமைச்சர்கள், சட்ட மன்றங்கள் உள்ள ஒன்றியப் பகுதிகளின் முதலமைச்சர்கள் மற்றும் ஒன்றிய பகுதிகளின் துணைநிலை ஆளுநர்கள்.
3. ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்கள் கல்விப் பிராந்தியங்கள் சம்மந்தப்பட்ட விவகாரங்களைக் கவனிக்க பிராந்திய மன்றங்கள் அமைக்கப்படும். இம்மன்றங்கள் பிரதமரால் கூட்டப்படும்.
4. வல்லலுநர்கள், துறை நிபுணர்கள் கள அனுபவமுடையோர் சிறப்பு அழைப்பாளர்கள்.
5. நிதி ஆயோக்கின் முழுநேர உறுப்பினர்கள்:
   i. துணைத்தலைவர் : தற்போது அர்விந்த் பனகாரியா
   ii. உறுப்பினர்கள் : பிபேக் தேப்ராய், வி.கே.சரஸ்வத், பேராசிரியர் ரமேஷ் சந்த்.
   iii. பகுதி நேர உறுப்பினர்கள் : முன்னணி பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சிக் கூடங்களில் பணிபுரிவோர் இருவருக்கும் மேற்படலாம். இவர்கள் சுழற்சி முறையில் நியமிக்கப்படுவர்.
   iv. பிரதமரால் நியமிக்கப்படும் 4 அமைச்சர்கள்
   v. பிரதமரால் நியமிக்கப்படும் முதன்மை தலைமை நிர்வாக அதிகாரி. இவர் மத்திய அரசின் செயலர் பதவிக்கு இணையாவார். அமிதாப் கான்ட் முதல் தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.
6. செயலகம்

**மத்திய மாநில மனித உரிமைகள் ஆணையங்கள்**

தேசிய உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993 செப்டம்பர் 28ஆம் தேதி வெளியிடப்பட்ட அவசரச் சட்டத்தின் மூலம் துவக்கப்பட்டது. அதன்பின் நாடாளுமன்றம் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்றியது. இச்சட்டம் 1994லிருந்து நடைமுறைக்கு வந்தது. இந்த சட்டத்தை மத்திய அரசும் ம ாநில அரசுகளும் மனித உரிமைகள் ஆணையத்தை அமைக்க வழி வகுத்தது.

**ஆணையத்தின் அமைப்பு**

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தில் தலைவரும் 4 உறுப்பினர்களும் உள்ளனர். இவர்கள் அனைவரும் முழு நேரப் பணியாளர்கள். இவர்களன்றி தேசிய சிறுபான்மையினர் ஆணையம், தேசிய பட்டியல் வகுப்பார் ஆணையம், தேசிய பெண்கள் ஆணையத்தின் தலைவர்களும் இந்த ஆணையத்தின் உறுப்பினர்களாக கருதப்படுவர்.

தேசிய மனித உரிமைகள் ஆணையம் பல உறுப்பினர் அமைப்பாகும். இவ்வாறு அமைக்கப்படுவதற்குக் காரணம் அதன் செயல் சுதந்திரத்தையும், நடுநிலையையும் காப்பாற்றுவதற்கேயாகும் 5 உறுப்பினர்களைக் கொண்ட இந்த ஆணையத்தின் 3 உறுப்பினர்கள் உயர்நிலை நீதிமன்ற அனுபவம் உடையவரக இருக்க வேண்டும். ஆணையத் தலைவர் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகவும், பிற உறுப்பினர்கள் உச்சநீதிமன்ற நீதிபதிகளாகவோ அல்லது உயர்நீதிமன்ற நீதிபதியாகவோ இருதல் வேண்டும். இவர்கள் ஓய்வு பெற்ற நீதிபதிகளாகவும் இருக்கலாம். இவர்களினால் இவருக்கு மனித உரிமைகள் பற்றிய ஆழ்ந்த புலமையோ அல்லது நடைமுறை அனுபவமோ இருக்க வேண்டியது இன்றியமையாதது.

**பணிகளும் பொறுப்புகளும்**

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் பிரதான பணிகளாவன:

1. மனித உரிமை மீறல்கள் சம்பந்தப்பட்ட சட்ட நடவடிக்கைகளில் குறுக்கிடலாம்.
2. பொதுப்பணியாளர் மனித உரிமைகளை மீறினாலோ அல்லது அத்தகைய மீறல்களைத் தடுக்கத் தவறினாலோ விசாரிக்கலாம்.
3. மனித உரிமை மீறல் பற்றி நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் வழக்குகள் பற்றி விசாரிக்கலாம்.
4. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டப் பாதுகாப்புகளை மறுசீராய்வு செய்து அவை எவ்வாறு திறம்பட செயல்படுத்தப்பட வேண்டும் என்பது பற்றிய பரிந்துரைகளைச் செய்யலாம்.
5. பயங்கரவாதம் உள்ளிட்ட காரணிகளால் மனித உரிமைகளைப் பயன்படுத்த முடியாவிட்டால் அவற்றைப் பரிசீலித்து பரிந்துரைக்கலாம்.
6. மாநில அரசின் அனுமதியோடு எந்த சிறைச்சாலைக்கும் சென்று அங்குள்ளோரின் வாழ்க்கை நிலையைக் கண்டறிந்து பரிந்துரைகள் செய்யலாம்.
7. மனித உரிமைகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.
8. மனித உரிமைகளுக்காகப் பாடுபடும் அரசுசாரா அமைப்புகளை ஊக்குவிக்கலாம்.
9. மனித உரிமைகள் பற்றிய பன்னாட்டு உடன்படிக்கைகளை ஆய்வு செய்து அவற்றை மேலும் திறமையாகச் செயல்படுத்தலாம் என்பது பற்றிய சிபாரிசுகளைச் செய்யலாம்.
10. யாவற்றுக்கும் மேலாக தானே முன்வந்தோ அல்லது விண்ணப்பத்தின் பேரிலோ நடவடிக்கை எடுக்கலாம். மக்களிடையே மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

## மாநில மனித உரிமைகள் ஆணையங்கள்

### பிற மாநிலங்களில்

மாநில மனித உரிமைகள் ஆணையம் மத்திய மனித உரிமைகள், 1994 சட்டப்படி அமைக்கப்படுகிறது. இச்சட்டத்தின்படி மேற்கு வங்காளம், மத்தியப் பிரதேசம், அஸ்ஸாம், இமாச்சலப் பிரதேசம், பஞ்சாப், ஜம்மு & காஷ்மீர் போன்ற மாநிலங்களில் இந்த ஆணையம் அமைக்கப்பட்டது.

### தமிழ்நாட்டில்

இந்தியாவில் மாநில மனித உரிமைகள் ஆணையத்தை அமைத்ததில் தமிழ்நாடு 5வது இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு மனித உரிமைகள் ஆணையத்தில்

1. உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி
2. உயர்நீதிமன்ற நீதிபதி
3. மாவட்ட நீதிமன்ற நீதிபதி
4. மனித உரிமைகள் பற்றிய நடைமுறை அனுபவமுள்ள இருவர்
5. மாநில அரசுச் செயலர் பதவிக்கு இணையான ஒருவர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

மாநில ஆணையத்தின் தலைவரையும் உறுப்பினர்களையும் முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட தெரிவுக்குழுவின் பரிந்துரையின் பேரில் ஆளுநர் நியமிக்கிறார்.

## மத்திய தகவல் ஆணையம்

### அரசிதழ் அறிவிப்பு

மத்திய தகவல் ஆணையம் மத்திய அரசால் அரசிதழ் அறிவிப்பின் மூலம் அமைக்கப்பட்டது. இதில் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட ஒரு தலைமை தகவல் ஆணையரும், 10க்கும் மேற்படாத தகவல் ஆணையர்களும் இடம் பெற்றுள்ளனர். இவர்கள் குடியரசுத் தலைவரால் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்படுகின்றனர். இதன் தலைமையகம் டெல்லியிலும், அலுவலகங்கள் நாட்டின் பிற பகுதிகளிலும் உள்ளன. தகவல் அறியும் சட்டம் நடைமுறைக்கு வந்த (2005 அக்டோபர்) இரண்டு ஆண்டுகளுக்குப் பின் மத்திய தகவல் ஆணையம் அமைக்கப்பட்டது.

### அமைப்பு

மத்திய தகவல் ஆணையத் தலைவரும் பிற உறுப்பினர்களும் பொது வாழ்க்கையில் சட்டம், அறிவியல், தொழில்நுட்பம், சமுதாயவியல், மேலாண்மை, இதழியல், ஊடகங்கள், நிர்வாக அனுபவம் பெற்ற நிபுணர்கள். இவர்கள் மத்திய, மாநில, ஒன்றியப் பிரதேசங்களின் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கக் கூடாது. வேறு எந்த அரசியல் அல்லது வர்த்தகம் சம்பந்தமான அமைப்புகளில் ஊதியம் பெறும் பதவிகளில் இருத்தலாகாது. இந்த அமைப்புகளுடன் வேறு எந்த வகையிலும் தொடர்பு கொண்டிருக்கக் கூடாது. இவர்கள் பிரதமர் (தலைவர்), நாடாளுமன்ற

எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சரவைக் குழு உறுப்பினர் ஆகியோர் கொண்ட தெரிவுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**பதவிக்காலம்**

மத்தியக் தகவல் ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் அல்லது 65 வயதாகும் வரை. இவர்களது ஊதியம் தலைமை தேர்தல் ஆணையர் ஊதியத்துக்கு சமமானது. இந்த ஊதியமும் ஊதியச் சலுகைகளும் இவர்களது பதவிக் காலத்தில் மாற்றக் கூடாது. இவர்கள் 5 ஆண்டுகளுக்கு மிகாமல் தகவல் ஆணையங்களில் மீண்டும் பதவி பெறலாம்.

**அதிகாரங்களும் பணிகளும்**

மத்திய தகவல் ஆணையத்தின் அதிகாரங்களும் பணிகளும் 3 பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1. தகவல் கோருபவர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளல்.
2. இந்த ஆணையத்துக்கு சிவில் நீதிமன்றங்களுக்கான அதிகாரங்கள் உண்டு.
3. இந்த ஆணையத்ன் தீர்ப்புகள் நடைமுறைப்படுத்துப்படுவது பற்றிப் பொது அதிகாரிகளின் இணக்கத்தைப் பெறும் அதிகாரம்.

மத்திய தகவல் ஆணையம் அதன் விரிவான ஆண்டு அறிக்கையை மத்திய அரசிடம் சமர்ப்பிக்கின்றது. இந்த அறிக்கையில் பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை, எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், ஏற்றுக் கொள்ளப்படாத கோரிக்கைகள், மேல் முறையீடுகள், எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள், வசூலிக்கப்பட்ட கட்டணங்கள் போன்ற விவரங்கள் இடம்பெறும். இந்த அறிக்கை ஒவ்வொரு ஆண்டும் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டுகிறது. விவாதிக்கப்பட வேண்டும். நடைமுறைக் குறைபாடுகள் பல இருப்பினும் மத்திய தகவல் ஆணையம் மத்திய அரசு பற்றிய தகவல் களைப் பெறுவதற்குப் பேருதவியாக உள்ளது.

## ஐக்கிய நாடுகள் சபை

சர்வதேச சங்கமானது தனது நோக்கத்தில் வெற்றி பெறாததை அடுத்து, உலக அமைதியை பாதுகாக்கும் சர்வதேச அமைப்பின் பணியானது ஒரு கனவாக நிறைவேறாமலேயே இருந்தது.

இரண்டாம் உலகப்போர் ஏழு கோடி பேருக்கு மேற்பட்டோரை பலி கொண்டிருந்தது, ஐக்கிய நாடுகள் சபையை தோற்றுவிப்பதற்கான கருத்தானது உலக தலைவர்களை ஒருங்கிணைத்து போரை முடிவுக்கு கொண்டு வந்ததுடன் அமைதியை பாதுகாத்து எதிர்காலத்தில் போர் ஏற்படாமல் இருப்பதற்கான வலுவான ஓர் கட்டமைப்பை ஏற்படுத்தவும் செய்தது. மேலும் பிரிந்திருந்த நாடுகளை ஒருங்கிணைத்து ஓர் உலகம் தழுவிய அமைப்பை ஏற்படுத்துவதற்கான பணியினை மேற்கொள்ள செய்தது.

அமெரிக்க குடியரசுத்தலைவர் பிராங்களின் டி ரூஸ்வெல்ட் ஆல் உருவாக்கப்பட்ட 'ஐக்கிய நாடுகள் சபை' என்ற பெயரானது முதன் முதலாக 1942இல் இருபத்தி ஆறு நாடுகளின் பிரதிநிதிகள் கையெழுத்திட்டு ஏற்றுக் கொண்ட ஐக்கிய நாடுகள் சபைக்கான ஒப்பந்தத்தில் பயன்படுத்தப்பட்டது. மேலும், இந்த அணி அச்சு நாடுகளின் அதிகாரத்திற்கு எதிராக அமைதியை நிலைநாட்ட தொடர்ந்து போராடி வந்தது. சர்வதேச சங்கத்தை போல் அல்லாமல் இது அனைத்து நாடுகளின் கூட்டணியுடன் தொடங்கியது. ஜப்பானின் பேரில் துறைமுக தாக்குதலுக்கு பிறகு போரில் இறங்கிய அமெரிக்கா, முதல் உலகப்போருக்கு பின் மீண்டெழுந்து அமெரிக்காவுடன் போர் பிரகடனம் செய்த ஜெர்மனியும் இணைந்தது. 1944இல் ஆகஸ்டில் சீனா, சோவியத் யூனியன், இங்கிலாந்து மற்றும் அமெரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் டம்பார்டன் ஓக்ஸில் சந்தித்து புதிய சர்வதேச அமைப்பிற்கான அடிப்படை வரைவை உருவாக்கினர். இது அக்டோபர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் சாசனமாக மாறியது

**ஐ.நா.-வின் நான்கு முக்கிய நோக்கங்கள்**

1. இராணுவ பாதுகாப்பு
2. பொருளாதார மற்றும் சமூக மேம்பாடு
3. மனித உரிமைகளை பாதுகாப்பது
4. சர்வதேச நீதி

1945ஆம் ஆண்டு ஜெர்மனி சரண் அடைந்ததை அடுத்து, 50 நாடுகளின் பிரதிநிதிகள் சான் பிரான்ஸிஸ்கோ நகரில் ஜுன் 26, 1945இல் கூடி சாசனத்தில் கையெழுத்திட்டனர். 1945இல் அக்டோபர் 24இல் பசிபிக் போர் முடிவுக்கு வந்ததை அடுத்து அமெரிக்காவானது அதிகார பூர்வமாக இதில் இணைந்து கொண்டது. இதற்கிடையே சாசனத்தை வரைவதில் எந்த பிரச்சனையை சர்வதேச சங்கம் எதிர் கொண்டதோ அதே பிரச்சனை எந்த மாற்றமும் இல்லாமல் ஐ.நா. அமைப்பும் எதிர் கொண்டது.

இந்த அடிப்படை குழப்பம் எந்த மாற்றமும் இல்லாமல் அப்படியே தொடர்ந்தது. ஒரு நாட்டின் இறையாண்மைக்கும், சர்வதேச கருத்துக்களுக்குமிடையே எவ்வாறு சமநிலை காண்பது. நாடுகள் ஒன்றுக்கொன்று சமமில்லாத நிலையில், எவ்வாறு அனைவருக்கும் சமமான, பொருந்துகிற சாசனத்தை வரைவது, ஐ.நா–வின் முடிவுகளில் விருப்பமில்லாத போது, ஒரு நாடு ஐ.நா. அமைப்பை விட்டு எளிதாக வெளியேறாமல் தடுப்பது (1930களின் முற்பகுதியில் ஜப்பான் அவ்வாறு செய்தது). இவற்றிற்கெல்லாம் ஒரு தீர்வாக மறுதலிக்கும் அதிகாரத்தை சாசன வரைவாளர்கள் கொண்டு வந்தனர். மறுதலிக்கம் அதிகாரமானது ஐ.நா.–வின் ஐந்து ஆரம்பகால உறுப்பினர்களான சீனா, பிரான்சு, இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியனுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் நிரந்தர ஐந்து (P-5) உறுப்பினராக கருதப்படுகின்றனர். அது மட்டுமல்லாமல் ஐ.நா.வை துவக்கியவர்கள் மிகவும் நன்றாக சர்வதேச சங்கத்தின் தோல்விக்கான காரணங்களை அறிந்து இருந்ததால் அந்த அனுபவங்களை கொண்டு ஐ.நா.விற்கான சாசனத்தின் முக்கிய கூறுகளை வடிவமைத்தனர். முக்கிய எடுத்துக்காட்டாக, ஐ.நா.வின் சாசனமானது சர்வதேச சங்கத்தின் தீர்மானத்தை போலவே சர்வதேச பாதுகாப்பை மேம்படுத்துவது மற்றும் அமைதியான வழியில் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதை

முக்கிய நோக்கமாக கொண்டிருக்கிறது. சாசனமானது மேலும் இரண்டு முக்கிய கூறுகளை முதன்மையாக கொண்டிருக்கிறது.

ஏற்கனவே இதனை பிரதிபலிக்கும் வகையில் ஐ.நா.சாசனத்தின் உறுப்பு 23-வது சர்வதேச சங்கத்தின் தீர்மானத்தை போலவே சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டை அடிப்படை நோக்கமாக கொண்டுள்ளது. சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டை வெறும் வார்த்தை அளவில் இல்லாமல் போர்களுக்கு இடைப்பட்ட ஆண்டுகளின் அனுபவத்தை வேராக கொண்டிக்கிறது. பலரும் குறிப்பிடுவது போல 1920 மற்றும் 1930களில் ஏற்பட்ட உலகப் பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக அரசியல் எழுச்சிகள் பெரும் தேசியவாதத்தை ஏற்படுத்தியதும் அவற்றின் விளைவான ஆக்கிரமிப்புகளுமே இரண்டாம் உலகப் போருக்கான காரணமாக அமைந்தன. இதுவே, ஐ.நா.-வானது தோற்றுவிக்கப்பட்டு உலக பிரச்சனைகளில் முனைப்புடன் ஈடுபட செய்தது.

1945இல் ஐ.நா. ஆறு முக்கிய அமைப்புகளை கொண்டதாக இருந்தது. அவை: 1. பொதுச்சபை 2. பாதுகாப்பு குழு, 3. பொருளாதார மற்றும் சமூக குழு, 4.அறங்காவலர் குழு, 5. சர்வதேச நீதிமன்றம் மற்றும் 6. செயலகம் ஆகும். இதில் அறங்காவலர் குழுவானது காலனிய ஒழிப்பிற்கான நடைமுறை தேவைகளை கொண்டிருந்தது. காலனிய ஒழிப்பிற்கு பிறகு இதன் பணி தேவையற்றதாக ஆகிவிட்டது. இருந்த போதும் இது ஐ.நாவின் முக்கிய அடிப்படை அமைப்புகளில் ஒன்றாக திகழ்கிறது. ஐ.நா. வின் அனைத்து அமைப்புகளும் முறையே கூடி முக்கிய பிரச்சனைகள் குறித்து விவாதிக்கின்றனர், உறுப்பினர்களின் ஓட்டெடுப்பின் மூலமே முடிவுகளும், அறிக்கைகளும் வெளியிடப்படுகின்றன. இருந்த போதிலும் இதன் ஒவ்வொரு அமைப்பின் நடைமுறைகளும் ஒன்றுக்கு ஒன்று வேறுபடுகின்றன. குறிப்பாக பொதுச்சபையானது ஐ.நா.விற்கான நாடாளுமன்றமாகவும், பாதுகாப்புக் குழு நிர்வாக குழுவாகவும், செயலகம் நடைமுறைபடுத்துவதற்கான அமைப்பாக (அல்லது) ஐ.நா.வின் நிர்வாக பிரிவாக செயல்படுகின்றது.

**பொதுச்சபை**

ஐ.நா.வின் பொதுச் சபையானது கூடி விவாதிக்ககூடிய ஓர் முக்கிய அமைப்பாக உள்ளது. உறுப்பு நாடுகள் பரப்பளவில் எவ்வளவு பெரியதாக இருந்தாலும், செல்வாக்கு மிக்கதாக இருந்தாலும் அவை அனைத்திற்கும் சமமாக ஒரு ஓட்டு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இங்கு ஐ.நா.வின் சாசனத்தின் கீழ் எழும் பிரச்சனைகள் குறித்த விவாதமானது நடைபெறுகிறது. குறிப்பாக சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பு, புதிய உறுப்பினர்களை இணைத்து கொள்வது, ஐ.நா.விற்கான நிதிநிலை அறிக்கை போன்றவை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் ஒரு நாட்டிற்கு ஒரு ஓட்டு என்ற விதியின் அடிப்படையில் நிறைவேற்றப்படுகின்றன. உறுப்பு நாடுகளால் முன்மொழியப்படும் பிரச்சனைகள் மீது பொதுச்சபையில் தீர்மானங்கள் கொண்டு வரப்படுகின்றன. பொதுச் சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் அடிப்படையில் பரிந்துரைகளே, ஆனால் அவை உலக மக்களில் பெரும்பான்மை யோரின் கருத்தை பிரநிதித்துவப்படுத்தும் விதத்தில் இருப்பதால், அந்த பரிந்துரைகள், மதிப்பு மிகுந்ததாக உள்ளது. இதன் அடிப்படையில் சர்வதேச உடன்படிக்கைகளில், ஒப்பந்தங்களில் மற்றும்

சாசனங்களில் பல்வேறு நாடுகள் இணைந்து அவற்றின் அம்சங்களை நடைமுறைப்படுத்துகின்றன. பொதுச்சபையின் கூட்டமானது ஒவ்வொரு செப்டம்பர் மாதமும் நடைபெறுகிறது. பெரும்பான்மை யான தீர்மானங்கள் செப்டம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களிடையே நிறைவேற்றப்படுகின்றன. சிறப்பு கூட்டத்திற்கான கோரிக்கையானது பாதுகாப்புக் குழுவினாலோ அல்லது பெரும்பான்மை உறுப்பினர்களாலோ முன்மொழியப்பட வேண்டும். பொதுச்சபையின் வழக்கமான கூட்டத் தொடரின் முதல் இரண்டு வாரங்கள் உறுப்பு நாடுகளின் கருத்தை அறியும் வண்ணம் பொது விவாதமாக நடத்தப்படுகிறது. இது மிகவும் பரந்த அளவிலான பிரச்சனைகளை தீவிரவாதம், போர், வறுமை, பசி மற்றும் நோய்கள் குறித்ததாக அமைகிறது. பொதுச் சபையின் பணிகள் ஆறு குழுக்களின் வழியே மேற்கொள்ளப்படுகிறது.

**ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் நடவடிக்கையின் பட்டியல்**

| வ.எண் | கண்டங்கள் | பணியின் பெயர் | இடம் | பிரச்சனை | நடவடிக்கை மேற்கொள்ளப் பட்ட ஆண்டு |
|---|---|---|---|---|---|
| 1 | ஆப்பிரிக்கா | காங்கோவில் ஐக்கிய நாடுகளின் செயல்பாடு (ONUC) | காங்கோ ஜனநாயக குடியரசு | காங்கோ நெருககடி | 1960-1964 |
| 2 | ஆசியா | ஐக்கிய நாடுகள் சபை இந்தியா – பாகிஸ்தான் கண்காணிப்பு பணி (UNIPOM) | இந்தியா, பாகிஸ்தான் | 1965 இந்தியா – பாகிஸ்தான் போர் | 1965-1966 |
| 3 | ஆசியா | ஐ.நா.வின் திரும்ப பெறுவதற்கான கண்காணிப்பு படை (UNDOF) | இஸ்ரேல், சிரியா, லெபனான் | யோம் கீப்பூர் போரில் இருந்து இஸ்ரேல் மற்றும் சிரியா படைகளை திரும்ப பெறுவது | 1974 |
| 4 | ஆப்பிரிக்கா | சோமாலியாவில் ஐக்கிய நாடுகளின் செயல்பாடு ஒன்று (UNOSOM -1) | சோமாலியா | சோமாலியா உள்நாட்டு போர் | 1992-1993 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | ஆப்பிரிக்கா | ருவாண்டாவிற்கான ஐ.நா.வின் உதவித் திட்டம் (UNAMIR) | ருவாண்டா | ருவாண்டா உள்நாட்டு போர் | 1993-1996 |
| 6 | வட அமெரிக்கா | ஐ.நா.வின் தூதுக்குழு ஹைட்டி (UNMIH) | ஹைட்டி | 1991இல் ஹைட்டியில் ஆட்சி கவிழ்ப்பு மற்றும் இராணுவ ஆட்சி | 1993-1996 |
| 7 | ஐரோப்பா | ஐ.நா.வின் தூதுக்குழு போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா (UNMIBH) | போஸ்னியா மற்றும் ஹெர்சகோ வினா | போஸ்னியா போர் | 1995-2002 |
| 8 | ஐரோப்பா | ஐ.நா.வின் இடைகால நிர்வாக தூதுக்குழு கோசாவா (UN-MIK) | கோசாவா | கோசாவா போர் | 1999 |
| 9 | ஆப்பிரிக்கா | ஐ.நா.வின் தூதுக்குழு சீயரா லியோன் (UU-NAMSIL) | சியரா லியோன் | சியரா லியோன் உள்நாட்டு போர் | 1999-2006 |
| 10 | ஆப்பிரிக்கா | ஐ.நா.வின் தூதுக்குழு எரித்திரியா மற்றும் எத்தியோப்பியா (UNMEF) | எரித்திரீயா எத்தியோப்பியா | எரித்திரீயா எத்தியோப்பியா போர் | 2000-2008 |
| 11 | ஆப்பிரிக்கா | ஐ.நா.வின் தூதுக்குழு சூடான் (UNMIS) | சூடான் | இரண்டாவது சூடான் உள்நாட்டு போர் | 2005-2011 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | ஆசியா | ஐ.நா.வின் ஒருங்கிணைந்த தூதுக்குழு தைமூர் லிஸ்டி (UNMIT) | கிழக்கு தைமூர் | 2006 கிழக்கு தைமூர் நெருக்கடி | 2006-2012 |
| 13 | ஆசியா | ஐ.நா.வின் கண்காணிப்பு தூதுக்குழு சிரியா (UNSMIS) | சிரியா | சிரியா உள்நாட்டு போர் | 2012 |
| 14 | வட அமெரிக்கா | ஐ.நா.வின் நீதிக்கு ஆதரவான தூதுக்குழு ஹைட்டி (MINUJUSTH) | ஹைட்டி | 2004 ஹைட்டி கிளர்ச்சி | 2017 |

**பாதுகாப்புச் சபை**

ஐ.நா.வின் சாசனப்படி பாதுகாப்புச் சபையானது சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான பொறுப்பு மிக்க அமைப்பாகும். இது பொதுச்சபையை போல் வழக்கமாக கூடுவதில்லை மாறாக சர்வதேச அமைதிக்கு அச்சுறுத்தல் ஏற்படும் போது எந்த நேரத்திலும் இதன் கூட்டமானது நடைபெறும். உறுப்பு நாடுகள் பாதுகாப்புச் சபையின் முடிவுகளை ஏற்று நடப்பது என்பது சட்ட ரீதியாக கட்டமைக்கப்பட்டிருக்கிறது. அமைதிக்கான அச்சுறுத்தல் ஏற்படும் பொழுது சபையானது பிரச்சனைக்குரிய நாடுகளை அழைத்து பேசி அமைதியான வழியில் ஒப்பந்தங்களை மேற்கொள்ளவும், மோதல்களை தவிர்க்கவும் செய்கிறது. மேலும் பாதுகாப்புச் சபையானது பேச்சு வார்த்தையின் மூலம் போர் நிறுத்தத்தை அறிவிக்கவும், பொருளாதார தடை விதிக்கவும் அல்லது ஐ.நா.வின் உறுப்பினர்களின் ஒப்புதலின் பெயரில் அதிகாரபூர்வ அமைப்பாக படைப்பலத்தினை பயன்படுத்தவும் செய்கிறது.

பாதுகாப்புச் சபை அமைதியை நிலைநிறுத்துவதற்கான பாதுகாப்பு நடவடிக்கையையும் மேற்கோள்கிறது. இது ஐந்து நிரந்தர உறுப்பினர்கள் உட்பட பதினைந்து உறுப்பினர்களை கொண்டுள்ளது. பிற பத்து உறுப்பினர்கள் பொதுச்சபையினால் இரண்டு ஆண்டுகள் காலத்திற்கு சுழற்சி முறையில் தேர்வு செய்யப்படுகின்றனர். பாதுகாப்புச் சபையில் ஓர் தீர்மானமானது இயற்றப்பட பதினைந்தில் ஒன்பது உறுப்பினர்களின் ஓட்டு தேவைப்படுகிறது. இருந்த போதும் ஐந்து நிரந்தர உறுப்பினர்களில் யார் ஒருவரும் தீர்மானத்திற்கு எதிராக ஓட்டு அளிப்பதை மறுதலிக்கும் அதிகாரமாக குறிப்பிடப்படுகிறது. மேலும் அத்தீர்மானமானது நிறைவேற்றப்படுவதில்லை. குழுவில் மேலும் அதிக நிரந்தர உறுப்பினர்களை இணைப்பதற்கான கோரிக்கைகள் எழுந்தால் அந்த கோரிக்கையானது ஐ.நா.வின் உறுப்பு நாடுகளால் தீர்மானிக்கப்படும்.

**பொருளாதார மற்றும் சமூக குழு**

ஐ.நா.வின் பொருளாதார மற்றும் சமூக குழுவிற்கான ஐம்பத்து நான்கு உறுப்பினர்கள் அனைத்து கண்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மூன்று ஆண்டு காலத்திற்கு தேர்வு செய்யப்படுகின்றனர். இது ஐ.நா.-விற்கான மைய அமைப்பாக ஐ.நா.-வின் பொருளாதார மற்றும் சமூக பணிகளை ஒருங்கிணைத்து மேற்கொள்கிறது. ஐ.நா.-வின் எழுபது சதவிகித திட்டங்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்துவது, வறுமையை ஒழிக்கும் வகையில் முழு வேலை வாய்ப்பு, பொருளாதாரம், சமூக மேம்பாடு மற்றும் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. இது வளரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்துவது, மனித உரிமைகளை பாதுகாப்பது, வறுமை மற்றும் வளர்ச்சி இன்மையை ஒழிப்பதற்கான உலகம் தழுவிய ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவது போன்ற பணிகளை மேற்கொள்கிறது. இப்பணிகளை மேற்கொள்வதற்கான சிறப்பு முகவாண்மைகளையும் தனக்கு கீழ் இக்குழுவானது கொண்டிருக்கிறது. அவை, உணவு மற்றும் விவசாய கழகம் (FAO), உலக சுகாதார கழகம் (WHO), ஐ.நா.வின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாடு கழகம் (UNESCO), ஐ.நா.வின் வளர்ச்சி திட்டங்கள் (UNDP), ஐ.நா-வின் குழந்தைகளுக்கான நிதி (UNICEF) மற்றும் ஐ.நா.வின் அகதிகளுக்கான உயர் ஆணையர் (UNHCR).

**அறங்காவலர் குழு**

ஐ.நா-வின் சாசனப்படி அறங்காவலர் குழுவானது பதினொரு முன்னால் காலனிய நில பகுதிகளின் நிர்வாகத்தை கண்காணித்து வருகிறது. இரண்டாம் உலகப் போரின் முடிவில், தற்சார்பற்ற இந்நிலப்பகுதியை சார்ந்த மக்களின் வளர்ச்சியாக சுயாட்சி அரசுகள் ஏற்படவும் அல்லது விடுதலையை அடைவதற்கான ஓர் நவீன முறையாகவும் இது உருவாக்கப்பட்டது.

இந்த பதினொரு பகுதிகளும் மற்றும் ஏழுபதுக்கும் மேற்பட்ட காலனிகளும் விடுதலை அடைவதற்கு ஐக்கிய நாடுகள் சபை உதவியாக இருந்தது. 1994இல் கடைசி பகுதியான பலாவ் ஆனது விடுதலையை அடைந்ததை அடுத்து அறங்காவலர் குழுவானது தனது பணியினை நிறுத்தி கொள்ளவும், தேவைப்படும் போது மட்டும் இக்குழு கூடுவதாகவும் முடிவு செய்தது. சீனா, பிரான்ஸ், இங்கிலாந்து, ரஷ்யா கூட்டமைப்பு மற்றும் அமெரிக்காவை இதன் நிரந்தர உறுப்பினர்களாக கொண்டு ஐ.நா. அறங்காவலர் குழுவை அமைத்திருந்தது. அனைத்து உறுப்பினர்களுக்கும் ஒருவருக்கு ஒரு ஓட்டு விகிதம் குறைந்தபட்ச பெரும்பான்மையுடன் இதன் முடிவுகள் இயற்றப்படுகின்றன. காலனிய ஒழிப்பு பணிகள் முடிவற்ற இக்கால சூழலில் அறங்காவலர் குழு முக்கியத்துவமற்றதாக காணப்படுகிறது.

**சர்வதேச நீதிமன்றம்**

ஐ.நா-வின் முக்கிய நீதித்துறை அமைப்பாக சர்வதேச நீதிமன்றமானது செயல்படுகிறது. இது நெதர்லாந்தில் உள்ள திஹேக் நகரத்தில் அமைந்துள்ளது. சர்வதேச நீதிமன்றம் அல்லது உலக நீதி மன்றமானது 1945இல் ஏற்படுத்தப்பட்டு 1946 முதல் செயல்பட்டு வருகிறது. இது ஒரு நிரந்தர நடுவர் நீதிமன்றமாகச் செயல்படுகிறது. இந்நீதிமன்றமானது சர்வதேச சட்டங்களின் படி நாடுகளுக்கு இடையில் ஏற்படும் பிரச்சனைகளை தீர்த்து வைக்கிறது. மாறாக, இது தனிநபர்களின் வழக்குகளை

விசாரிப்பது இல்லை. எந்த நாடும் இதன் விசாரணை தேவை இல்லை என கருதினால் தானாகவே விலகி கொள்ளலாம். இதற்கென்று எந்த சிறப்பு ஒப்பந்த விதிமுறைகளும் இல்லை. எந்த நாடு இந்நீதிமன்றத்தின் விசாரணையை ஏற்றுக் கொள்கிறதோ அது கண்டிப்பாக இதன் தீர்ப்புகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

1946இல் இருந்து சர்வதேச நீதிமன்றமானது 150க்கும் மேற்பட்ட வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்கியுள்ளது. குறிப்பாக, பொருளாதார உரிமைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, போக்குவரத்து வழிக்கான உரிமைகள், படையை பயன்படுத்தாமல் இருக்கவும், நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடாமல் இருக்கவும், தூதரக உறவுகள், பணயக்கைதிகளை விடுவிப்பது, அடைக்கல உரிமை மற்றும் தேசிய இன பிரச்சனைகள் போன்றவற்றிற்கும் தீர்வுகண்டிருக்கிறது. இந்நீதிமன்றத்தின் பதினைந்து நீதிபதிகளும் வெவ்வேறு நாடுகளை சேர்ந்தவர்களாக ஒன்பது ஆண்டு காலத்திற்கு தேர்வு செய்யப்படுகின்றனர். நீதிபதிகளை பொதுச்சபையும், பாதுகாப்புச் சபையும் சேர்ந்து தேர்வு செய்கின்றனர். நெதர்லாந்தின் தி ஹேக் நகரத்தில் அமைந்துள்ள இந்நீதிமன்றமும் அதன் அலுவலகமும் 'அமைதிக்கான அரண்மனையாக' திகழ்கின்றன. இதன் கட்டடமானது கார்னேஜ் அறக்கட்டளை என்ற லாப நோக்கம் இல்லாத அமைப்பால் சர்வதேச நீதிக்கான நிரந்தர நீதிமன்றத்தின் தலைமையிடமாக சர்வதேச சங்கத்திற்கு வழங்கப்பட்டது. ஐ.நா.வானது இக்கட்டடத்தை பயன்படுத்துவதற்கான ஆண்டு நிதியை இந்த அறக்கட்டளைக்கு வழங்குகிறது. பாதுகாப்புச் சபை இந்நீதிமன்றத்திற்கு வழக்குகளை பரிந்துரை செய்கிறது.

## வினாக்கள்

1. மத்திய தலைமைச்செயலகம் மற்றும் மத்திய அரசுத்துறைகள் பற்றி எழுதுக.
2. ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் நடவடிக்கைகளை எழுதுக.
3. தகவல் அறியும் சட்டம் பற்றி தொகுப்பு வரைக.